මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/64** **2024.09.04**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21
## ஊழியர்களுக்கு தத்தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

2024.09.21 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தல் தொடர்பான 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின், (2023 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் திருத்தஞ் செய்யப்பட்ட) ஏற்பாடுகள் பற்றி ஊழியர்கள் மற்றும் தொழில் தருநர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

"110 (1), தேர்தல் ஒன்றில் நேரடியாக வாக்களிப்பதற்கு உரித்துடையவரான வேறெவரேனும் ஆளின் தொழில் தருநராகவுள்ள ஆள் எவரும், அத்தகைய வேறு ஆளொருவரால் அதற்கென எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தேர்தலில் அத்தகைய வேறு ஆள் நேரடியாக வாக்களிக்க இயலச் செய்வதற்குப் போதுமானதெனக் கருதக்கூடியவாறான இடையறாது தொடர்ந்து செல்லும் அத்தகைய நேரத்துக்கு (நான்கு மணித்தியாலக் காலநீட்சிக்குக் குறையாத) எழுத்திலான சம்பள இழப்பில்லாத விடுமுறையை அத்தகைய வேறு ஆளுக்கு வழங்குதல் வேண்டும்."

"(1அ) தொழில் தருநர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைத் தருகின்ற கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும் :-

(அ) உட்பிரிவு (1) இன் கீழ் விடுமுறைக்கு விண்ணப்பிக்கின்ற ஆட்களின் பெயர்கள், அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் கீழ் விடுமுறை வழங்கப்பட்ட ஆட்களின் பெயர்களும் அத்தகைய ஆட்களுக்கு எக்காலப் பகுதிகளுக்கு அத்தகைய விடுமுறை வழங்கப்பட்டுள்ளதோ அக்காலப் பகுதிகளும்,

அத்துடன் அத்தகைய கூற்றைத் தொழிலிடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கச் செய்தலும் வேண்டும்." அத்துடன்,

(2) ஓராம் உட்பிரிவின் அல்லது (1ஆ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவினை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு மாதத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

02. மேற்குறிப்பிட்ட பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், தத்தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குமாறு எழுத்து மூலம் விண்ணப்பித்திருக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்குதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு வழங்கப்படும் விடுமுறைக்கான காலஎல்லை, அமய ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறை எனக் கருத்திற் கொள்ளல் வேண்டுமென்பதுடன், இது ஊழியர்களின் சாதாரண விடுமுறை உரிமைக்குப் புறம்பானதாக இருத்தல் வேண்டும்.

03. ஊழியரொருவருக்கு இச்செயலுக்காக வழங்கப்படுகின்ற விடுமுறைக் காலஎல்லை, அந்த ஊழியரின் கடமை நிலையம் மற்றும் வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள இடத்திற்கும் இடைப்பட்ட தூரத்தை அடிப்படையாக வைத்து தொழில் தருநரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

04. சட்டத்தின்படி, விடுமுறை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக இதற்கு முன்னரான தேர்தல்களின் போது ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமையால், இம்முறை தேர்தலிலும் வாக்களிப்பதற்காக உரித்துடைய அனைத்து ஊழியர்களுக்கும், சட்ட ரீதியாக உரித்துடைய அவ்விடுமுறையை வழங்குமாறு அரச மற்றும் தனியார் ஆகிய இரு தரப்பினரினதும் தொழில் தருநர்களிடம் வேண்டிக்கொள்கின்றேன்.

05. மேற்கூறப்பட்ட சனாதிபதித் தேர்தல், 2024 செப்டம்பர் மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமையன்று மு.ப. 7.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை நடாத்தப்படவுள்ளது.

06. இது தொடர்பாக அனைத்து தொழில் தருநர்களும் வழங்குகின்ற ஒத்துழைப்பு தொடர்பாக பெரிதும் மெச்சுகின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்